1975 நவம்பர் 10]

இடங்களில் கட்டடங்களைக் கட்டுகிறார்கள். இது மாவட்ட முதன்மைக் கல்வியதிகாரி அவர்களால் முடிவு எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சிவபுரம் நடராஜர் சிலை

*249 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவபுரம் நடராஜர் சிலையைத் திரும்பக் கொண்டுவருவது குறித்து இந்திய அரசு செய்து கொண்டு உள்ள ஒப்பந்தத்திற்கு முன்னதாக தமிழ்நாடு அரசை இந்திய அரசு கலந்தாலோசித்ததா?

(இ) நடராஜர் சிலை இறுதியாக தமிழ்நாட்டிற்கு எப்போது வந்துசேரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இதுபற்றித் தகவல் இல்லை.

திரு. என். கிட்டப்பா: சிவபுரம் நடராஜர் சிலையை மீட்டுக் கொண்டு வரும்போது அதை டில்லியில் வைத்துக்கொள்வது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. அப்படி மீட்கப்படும்போது சிவபுரத்திற்கே நடராஜர் வருவாரா அல்லது டில்லியிலேயே தங்கிவிடுவாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தப் பிரச்சினை இப்போது எழவில்லை. சிவபுரம் நடராஜர் சிலை இங்கிருந்து போன பிறகு தமிழக அரசு வழக்குப் பதிவு செய்தது. அது பம்பாய்க்குச் சென்று, பம்பாயில் பழம் பொருள் வாங்கும் வியாபாரிக்குச் சென்று, அவரிடத்திலிருந்து 'நார்ட்டன் சைமன் பவுன்டேஷன்' என்ற நிறுவனம் அதை வாங்கிக் கொண்டது—75 லட்சம் ரூபாய்க்கு. அதை மீட்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு இதுபற்றிய முழு விவரங்களும் அடங்கிய கடிதத்தை அனுப்பினார்கள். அதன் பேரில் அவர்கள் வெளி நாட்டோடு தொடர்பு கொண்டார்கள். அதற்குப் பிறகு வழக்கும் தொடுத்தோம். வழக்குப் பூர்த்தியாவதற்கு முன்பே ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்ற

அளவுக்கு இந்தியத் தூதரும் அந்த நிறுவனத்தினரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இப்போது அந்தச் சிலை பாதுகாப்பாக லண்டனில் வைக்கப்பட்டிருக்கிறது. பழுது பார்க்க அனுப்பப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்படுத்தப் பட்ட உடன்பாட்டின்படி 'நார்ட்டன் சைமன் பவுன்டேஷன்' பத்தாண்டு காலத்திற்கு அதை பல்வேறு பொருட்காட்சி சாலை களில் வைத்துவிட்டுத்தான் அனுப்புவார்கள். பத்தாண்டு காலத் திற்குப் பிறகு அது இங்கு வந்து சேரும். அது வந்தால் உரிய முறையில் தமிழகத்திற்குத்தான் வந்து சேர வேண்டும். டில்லி யிலே வைத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சிவபுரம் நடராஜர் சிலை வழக்கில் இலண்டன் நீதிபதி இந்தச் சிலை யாருக்கு உரிமை உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் தேவையான ஆதாரங்களைத் தாக்கல் செய்யக் கோரியுள்ளாரே, இந்த அரசாங்கம் தேடிக் கண்டு பிடித்துக் கொடுத்ததா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் முழு ஆவணங்களையும், முழு விவரங்களையும் மத்திய சர்க்காருக்கு அனுப்பி மத்திய சர்க்கார் அதை வைத்துத்தான் வழக்குப் பதிவு செய்தார்கள். நாம் தொடுத்த வழக்கிற்கும் கூட நீதிமன்றத்தில் சிலை தேவைப்படு கிறது. சிலையைக் கொடுங்கள், திருப்பித் தந்து விடுகிறோம் என்று எழுதியிருக்கிறோம்; அது பற்றி அவர்களைக் கேட்டுத்தான் முடிவு செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லியிருக் கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 255, 256, 257, 258, 259 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

Auction of elephants at Theppakadu.

* 265. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state

(*a*) whether an auction sale of elephants was conducted by the Forest Department on 19th March 1975 at Theppakadu near Ootacamund; and

(*b*) if so, the details of the same?